பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

11 09 2026 FRIDAY 6 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. இயற்கை பேரிடர்களின் போது உயிரிழப்பை தடுக்கும் வகையில் பேரிடர் மேலாண்மை அமைப்புகள் மேம்படுத்தப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

2. விவசாயிகளின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் புதிய விதைச்சட்டம் கொண்டுவரப்பட உள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

3. நவீன வசதிகளுடன் அரசு மருத்துவமனைகள் மேம்படுத்தப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

4. மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

5. கொரியாவில் நடைபெற்று வரும் உலக பாரா துப்பாக்கி சுடும் சாம்பியன் போட்டியில், இந்தியா, ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

--- இனி விரிவான செய்திகள் ---

-------------

இயற்கை பேரிடர்களின் போது, உயிரிழப்பு ஏற்படுவதை தடுக்கும் வகையில், பேரிடர் மேலாண்மை அமைப்புகள் முற்றிலும் மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தேசிய பேரிடர் மேலாண்மை நிறுவனத்தின் நிர்வாகக்குழு கூட்டத்தில் பேசிய அவர், இதனை தெரிவித்தார்.

பேரிடர் அபாயத்தை குறைப்பது, முன்னெச்சரிக்கை அமைப்புகளை வலுப்படுத்துவது, உயிரிழப்பை தடுப்பது ஆகிய 3 அம்சங்களை கருத்தில் கொண்டு திட்டங்கள் செயல்படுத்தப்படும் என்று அவர் கூறினார்.

கடந்த 12 ஆண்டுகளில் பேரிடர் மேலாண்மை தொடர்பான நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க வகையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அவர் சுட்டிக்காட்டினார்.

பேரிடர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் சர்வதேச சோளார் கூட்டமைப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான லைஃப் இயக்கம் போன்றவை முக்கிய பங்கு வகிப்பதாக அவர் தெரிவித்தார்.

இயற்கை பேரிடர்களை எதிர்கொள்ளும் வகையில், கிராமங்கள் மற்றும் நகர்ப்புறங்களை வடிவமைப்பதை இலக்காக கொண்டு அரசு செயல்பட்டுவருவதாக திரு. அமித் ஷா தெரிவித்தார்.

-------------

விவசாயிகளின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில், புதிய விதை சட்டம் கொண்டுவரப்பட உள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதிலும் உள்ள விவசாய சங்க பிரதிநிதிகளுடன் புதுதில்லியில் நேற்று நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

போலிவிதை பயன்பாடு, தரமற்ற விதைகள் உற்பத்தி போன்ற பல்வேறு சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இந்தப் புதிய சட்டம் இருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

விதைப்பயன்பாடு பறிமாற்றம், பாரம்பரிய விதை விற்பனை போன்றவற்றை விவசாயிகள் தொடர்ந்து மேற்கொள்ள முடியும் என்றும் பாரம்பரிய விதைகளுக்கான பதிவு முறை கட்டாயமாக்கப்படமாட்டாது என்றும் திரு. சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

-------------

இந்திய நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு உலகின் சிறந்த நிர்வாக நடைமுறைகளுக்கான அமைப்பாக திகழ்கிறது என்று மத்திய நாடாளுமன்ற விவகாரங்கள்துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜூ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்ற விழாவில் தேசிய இளையோர் நாடாளுமன்ற போட்டியில், வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கி பேசினார்.

ஜனநாயகத்தின் அடையாளமாக திகழும் நாடாளுமன்றத்தின் முக்கியத்துவம் குறித்து அவர் எடுத்துரைத்தார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் மேற்கொள்ளப்படும் நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு முறை இந்தியாவுக்கு பொறுத்தமானதாக உள்ளது என்று திரு. கிரண் ரிஜிஜூ தெரிவித்தார்.

இதுகுறித்து, மாணவர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

-------------

வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் திரு. செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வு கூட்டத்திற்கு பின்னர், செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து, அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியதாக அவர் கூறினார்.

இந்த பணிகளுக்கு தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக திரு. செங்கோட்டையன் கூறினார்.

-------------

ஆசியாவிலேயே முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவெடுக்க செய்யும் வகையில், நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

முதலீட்டாளர்கள் மாநாட்டின் மூலம் பல்வேறு நிறுவனங்களுடன் ஒரு லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிக முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளதாக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

ஐரோப்பிய நாடுகளை சேர்ந்த பன்னாட்டு நிறுவனங்கள், 8 ஆயிரத்து 491 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ளதாகவும், இதன் மூலம் 5 ஆயிரத்து 690 வேலைவாய்ப்புள் உருவாகும் என்றும் எதிர்ப்பார்க்கப்படுவதாக அந்த செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

தமிழ்நாட்டிற்கு தொழில்துறை சார்ந்த முதலீடுகளை ஈர்க்கும் வகையில் முதலமைச்சர் திரு. விஜய், பிரிட்டன் சென்றுள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

-------------

நவீன வசதிகளுடன் அனைத்து அரசு மருத்துவமனைகளின் கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

-------------

மேற்குத் தொடர்ச்சி மலை மாவட்டங்களில், ஓரிரு இடங்களில் இன்று மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தஞ்சை, திருவாரூர், நாகை, மயிலாடுதுறை ஆகிய மாவட்டங்களுக்கு உட்பட்ட ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

இதனிடையே, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில், பல்வேறு பகுதிகளில் நேற்று கனமழை பெய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒருசிலப் பகுதிகளில், மாலை அல்லது இரவு நேரங்களில், மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

-------------

இந்தியா - மலேஷியா இடையே கூட்டுக கடற்படை பயிற்சியில்பங்கேற்பதற்காக, இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான INS Mysore கப்பல் மலேசியாவின் Lumut துறைமுகம் சென்றடைந்தது.

-------------

மேற்காசியாவில் நிலவி வரும் பதற்றமான சூழல் காரணமாக, கச்சா எண்ணெய் விலை பீப்பாய் ஒன்றிற்கு 2 புள்ளி 7 சதவீதம் உயர்ந்து, 103 அமெரிக்க டாலராக அதிகரித்துள்ளது.

-------------

ஜார்க்கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த மூன்று மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் பாதுகாப்புப் படையினரிடம் சரணடைந்தனர்.

-------------

IRCTC உணவக முறைகேடு தொடர்பான விவகாரத்தில், முன்னாள் ரயில்வே அமைச்சர் திரு லாலு பிரசாத் யாதவ், உள்ளிட 9 பேர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யுமாறு தில்லி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

-------------

நிதித் துறையில் ஏற்படும் விரைவான புதிய கண்டுபிடிப்புகளுக்கு ஏற்ப, வலுவான பாதுகாப்பு நடவடிக்கைகளும் இருக்க வேண்டும் என்று இந்திய பங்கு பரிவர்த்தனை வாரியத்தின் தலைவர் திரு துஹின் கந்தா பாண்டே தெரிவித்துள்ளார்.

-------------

கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற யுஜிசி நெட் தேர்வின் ஆங்கிலம், வணிகவியல் மற்றும் சமூகவியல் பாடங்களுக்கான மறுதேர்வுக்கான தற்காலிக விடைக்குறிப்புகளை தேசியத் தேர்வுகள் முகமை வெளியிட்டுள்ளது.

-------------

விருதுநகர் மாவட்டத்தில் பட்டாசு வெடிவிபத்தில் பெற்றோர்களை இழந்த குழந்தைகளின் மறுவாழ்விற்கான அறக்கட்டளையை மாநில அமைச்சர் திருமதி ஜெகதீஸ்வரி தொடங்கி வைத்தார்.

---------

உலகப் பிரசித்தி பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோயில் மகா கும்பாபிஷேக விழாவையொட்டி, பொற்றாமரை குளத்தில் பேரொளி வழிபாடு வெகு விமர்சையாக நடைபெற்றது.

-------------

காஞ்சிபுரம் காமாட்சி அம்மன் கோயிலில் ஆவணி மாத அமாவாசை தினத்தையொட்டி தங்கத் தேர் உற்சவம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

----------

வேலூர் மாவட்டம் காட்பாடி அருகே மந்தி கிருஷ்ணாபுரம் பகுதியில் உள்ள தேவாலயத்தின் கட்டுமான பணியின் போது, மேற்கூரை இடிந்து விழுந்ததில் தொழிலாளர்கள் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

--------

உலக பாரா துப்பாக்கி சுடும் சாம்பியன் போட்டியில், இந்தியா, ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

கொரியாவின் Chongwon-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில், 10-மீட்டர் ஏர் ரைபிள் ஸ்டாண்டிங் பிரிவில், மகளிர் குழுப் போட்டியில், இந்தியாவின் மோனா அகர்வால், அவனி லெகாரா மற்றும் மிலி ஷா ஆகியோர் அடங்கிய இந்திய மகளிர் அணி தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியது.

ஆடவர் 10-மீட்டர் ஏர் ரைபிள் ஸ்டாண்டிங் பிரிவில், இந்தியாவின் Rakesh Nidagundi, Ananda Krishna, Swaroop Unhalkar ஆகியோர் அடங்கிய இந்திய அணி, வெள்ளிப்பதக்கம் வென்றது.

------------

ஆசிய கோப்பை மகளிர் டுவெண்ட்டி - டுவெண்ட்டி கிரிக்கெட் போட்டியில், இந்திய அணி 40 ரன் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வென்று இறுதி போட்டிக்கு முன்னேறியுள்ளது.

துபாயில் நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில், முதலில் ஆடிய இந்திய அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 149 ரன் எடுத்தது.

இதனையடுத்து 150 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய பங்களாதேஷ் அணி, 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 109 ரன் எடுத்தது.

--------------

வியட்நாம் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் மான்சி சிங் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

நேற்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், 23-21, 23-19 என்ற செட் கணக்கில், சீனாவின் Xu Wenjing-ஐ வென்றார்.

**<<<<< >>>>>**